சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | வசந்தம் நகர்., காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

என்ன பரிகாரம் கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பூமி வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். என்னுடைய நிரூபண வாக்கு மூலத்தை யார் சொல்லி எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் எனது வழக்கறிஞர் சொல்லி தயாரிக்கப்பட்டது. அதில் என்ன உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் புல எண் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் புல எண். 33 ல் 3.60 ஏக்கர் புல எண்.41 ல் 3 ஏக்கர் 84 செண்ட், புல எண்.49-ல் 3 ஏக்கர் 60 செண்ட் உள்ளது. இந்த சொத்துக்களில் பாகம் வேண்டும் என்று தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகியோருடைய சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றால் திருமப்ப கவுடரின் சுய சம்பாத்ய சொத்து ஆகும். கெம்பக்காள் திருமப்ப கவுடருக்கு மனைவி என்பதால் தாவா சொத்துக்களை கொடுத்து விட்டார். தாவா சொத்துக்கான கிரைய பத்திரங்கள் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகிய இருவரின் பெயரில் தான் உள்ளன என்றால் சரி தான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.